1982 மார்ச் 5]

தமிழ் நாட்டில் மதம் மாறி வரும் ஆதி திராவிடர்கள்.

*வினா எண் 379—திரு. எம். சின்னசாமி :
திரு. இரா. தாமரைக்கனி :
திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ஆதி திராவிடர்கள் முஸ்லீம் மதத்திற்கு மாறி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) ஆதி திராவிடர்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவியதற்கு காரணம் அவர்களுக்கு சாதி இந்துக்கள் சமூகத்தில் தங்களுக்கு இணையாக அந்தஸ்து கொடுக்க மறுத்ததும், மற்றும் இப்போது படித்து பொருளாதார வகையில் மேம்பாடு அடையத் தொடங்கியுள்ள ஆதி திராவிட இளைஞர்கள், அரசுப் பணிகளில் இருக்கும் ஆதி திராவிட இளைஞர்கள் தங்கள் மூதாதையர் கள் சாதி இந்துக்களிடம் வழிவழியாக அடங்கி ஒடுங்கி வாழ்ந்து வந்த பழக்க வழக்கங்களையும் அவர்களது வாழ்விற்கு சாதி இந்துக்களையே இன்னும் நம்பிக் கொண்டிருக்கும் தாழ்வு உணர்வுகளைக் கண்டு மனம் கொதித்து இருப்பதும் ஆகும். மேலும் அரசு அவர்களுக்கு அளித்த பல சலுகை களினால் பொருளாதார நிலை உயர்ந்திருந்தாலும் அவர்களுக்கு சமூக அந்தஸ்து, சம அந்தஸ்து கொடுக்கப்படாததால் ஆதி திராவிட இளைஞர் களிடையே சாதி சமயத்திற்கு எதிரான உணர்வு உருவாகி உள்ளது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு அரசு போதிய பாதுகாப்பு கொடுக்கவில்லை என்ப தால்தான் இந்த மத மாற்றம் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : துணைத் தலைவரவர்களே, என் னுடைய விடையிலே விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். போதிய பாது காப்பு இல்லாததன் காரணமாக மதம் மாறினார்கள் என்பது தவறு. அந்த அடிப்படையிலே அவர்கள் மதம் மாறவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஆதி திராவிட மக்கள் மதம் மாறுவதை தடுப்பதற்கு தடைச்சட்டம் கொண்டுவரப்படுமா ? அப்படி தடைச்சட்டம் கொண்டுவரும் போது அரபிக் நாட்டில் இருப்பதைபோல கட்டாயமாக மதம் மாற தூண்டுகிற வர்களுக்கும் மாறுகிறவர்களுக்கும் மாறுகால், மாறு கை வாங்குதல், உறுப்பு களைத் துண்டித்தல், சிறையில் அடைத்தல், சிரச்சேதம் செய்தல், தூக்கி விடுதல் போன்ற தண்டனைகளை விதிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : துணைத் தலைவரவர்களே, மதம் மாறுவது என்பது அவரவர்களுடைய சொந்த விருப்பமாகும். அதைத் தடை செய்ய அரசியல் சட்டத்திலும் இடமில்லை ; அதை யாரும் தடுக்க முடியாது. அதனால் தமிழக அரசால் மதம் மாறுவதைத் தடுக்க தடைச் சட்டம் கொண்டுவர சாத்தியம் இல்லை. கட்டாயமாக மதம் மாற தூண்டு கிறவர்களுக்கு என்ன தண்டனை என்று கேட்கிறார்கள். தற்போது இருக் கிற அரசியல் சட்டத்தில் இருக்கிற வழிவகைகளை ஆராய்ந்து அரசு அதற் கான நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உலகத்திலே பழமையான மதமாகவும் இந்தியாவிலேயே தோன்றிய மதமாக வும் இருக்கிற இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறுவதைத் தடுக்க சர்க்காரில் இருக்கிற அறநிலையத் துறையால் என்ன ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது ? இந்து சமயத் தலைவர் காஞ்சி சங்கராச்சாரியார் அவர்களைச் சந்தித்து இந்த மாறுதலைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா ? அதுபற்றி அரசு யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : துணைத் தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரை மதங்கள்மீது பூரண நம்பிக்கை கொண்டு, ' எல்லா மதமும் சம்மதம் ' என்ற வகையில் செயல்பட்டு வருகிறது. சில இடங்களில் மதமாற்றம் ஏற்பட்டபிறகு காஞ்சி பெரியவர் போன்றவர்கள் தற்போது ஆதி திராவிடர்கள் பெரும்பாலாக வாழ்கின்ற பகுதிகளுக்கு சென்று நற்பணி யாற்றி வருகிறார்கள். அரசைப் பொறுத்தவரையில் எம்மதமும் சம்மதம் என்று செயல்படும்போது அவர்களைச் சென்று பணியாற்ற வேண்டுமென்று சொல்லவில்லை, அறிவுறுத்தவும் இல்லை. ஆனால் அவர்களாகச் சென்று பணியாற்றுவதற்கு எந்தத் தடையும் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 5]

திரு. இல. பலராமன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எந்த எந்த மாவட்டத்தில் எவ்வளவு ஆதி திராவிடர்கள் முஸ்லீம்களாக மாறியிருக்கிறார்கள் அல்லது முஸ்லீம்கள் இந்துக்களாக மாறியிருக்கிறார்கள்? எனக்கு முன்னால் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போன்று காஞ்சி பெரியர் சங்கராச்சாரியார் போன்றவர்கள் மட்டுமல்லாமல் அரசுத் துறையைச் சேர்ந்தவர்கள் என்ன நடவடிக்கை இதிலே எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : துணைத் தலைவரவர்களே, மாநிலம் முழுவதும் எவ்வளவு பேர் மதம் மாறியிருக்கிறார்கள் என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன். ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரை மதமாற்றங்கள் பற்றி இந்த அரசு கவலை கொண்டிருந்தாலும், மதமாற்றத்தைத் தவிர்க்கின்ற வகையில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற பல்வேறு சலுகைகளை துரிதமாக அவர்களுக்கு வழங்க, விரைவில் அவர்களைச் சென்றடைய, எந்தெந்த வகையில் ஆவன செய்யலாம் என்று அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு, சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

(முற்பகல் 10-20)

திரு. ஜி. மூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் மதம் மாறுவதற்கு தங்களுடைய சமுதாய சூழ்நிலைதான் மிகப்பெரிய காரணம் என்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அப்படி ஆதி திராவிட சமுதாயத்திலிருந்தவர்கள் வேறு மதத்திற்கு மாறி அதற்குப் பிறகு மீண்டும் இந்து மதத்திற்கே வருவார்களானால் அவர்களை எந்தச் சமுதாயத்திலே சேர்த்துக்கொள்வது என்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, ஆதி திராவிடர்கள் மதம் மாறுவதற்குரிய காரணம் என்ன என்பது பற்றி முன்பே நான் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய இன்னொரு கருத்தைப் பற்றி விரிவான பதிலைப் பெறவேண்டும் என்றால் தனியாகக் கேள்வி போட வேண்டும்.